போகும்போது அவர்களுக்கு இடமோ, வேலையோ கிடைக்கவில்லை. அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் 50 ஆயிரம் அல்லது 60 ஆயிரம் அர்ச்சகர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினை அமைச்சர் அவர்களுடைய துறையைச் சார்ந்ததில்லை என்றாகும், இந்த அர்ச்சகர்களை மட்டுமாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆலோசித்து, பின் தங்கிய வகுப்பினர் என்று அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினருக்கு ஒன்று சொல்கிறேன். ஏற்கெனவே அவர் தெரிவித்திருக்கிற கொள்கையைத்தான் உறுப்பினரவர்கள் திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு நேரமாகிறது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவரவர்களே, இது ஒரு நீண்ட விடை அளிக்கவேண்டிய கேள்வி. தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வியாகப் போட்டால் அதற்கான விரிவான பதிலைத் தரமுடியும். அது குறுகியகால வினாவாக இருந்தாலும்கூட, அதைப்பற்றி துறை பரிசீலிக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கே 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 10 கேள்விகள் இருக்கின்றன.

(முற்பகல் 10-10)

திரு. சி. ஆர். கோலப்பா : தலைவர் அவர்களே, கோயில் அர்ச்சகர்களாக வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர்களையும் நியமிக்கும் கருத்து அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இது ஸ்ரீமுஷ்ணம் கோயில் அர்ச்சகர்களின் ஊதியத்தைப் பற்றிய கேள்வி.

சந்தனக்கட்டை எண்ணெய் ஆலை.

* 212 வினா.—**திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) வாணியம்பாடி அருகிலுள்ள தெக்குப்பட்டி கிராமத்தில், சந்தனக் கட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலை ஒன்று கட்டி முடிக்கப்பட் டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது உற்பத்தி துவங்கும் ?

1986 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) மற்றும் (இ) 1985 அக்டோபர் முதல் உற்பத்தி துவக்கப்பட்டுள்ளது.

திரு. அ. ப. சிவராமன் : வாணியம்பாடிக்கு அருகிலுள்ள தெக்குப்பட்டு கிராமத்தில் தமிழக அரசால் சந்தன எண்ணெய் எடுக்கும் ஆலை எவ்வளவு மதிப்பீட்டுத் தொகையில் தொடங்கப்பட்டது? அந்த ஆலை எப்போது கட்டி முடிக்கபபட்டது ? அதற்கான சோதனை ஓட்டம் எப்போது மேற்கொள்ளப் பட்டது ? அந்த ஆலை எப்போது திறக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : ரூபாய் 85 லட்சம் முதலீட்டில் இந்த ஆலை கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. 1985 ஆம் ஆண்டு இந்த ஆலையின் சோதனை ஓட்டம் எல்லாம் நடைபெற்றிருக்கிறது. 1985 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தொழிற்சாலை உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறது. முதல் முறையாக அந்த ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட 1,000 கிலோ சந்தன எண்ணெய் உலகச் சந்தையில் 18.25 லட்சம் ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது. 2,000 கிலோ சந்தன எண்ணெய்க்கு உலகச் சந்தையில் வியாபார பேரம் நடக்கிறது.

திரு. அ. ப. சிவராமன் : இந்தியாவிலேயே மிக உயர்ந்த தரம் வாய்ந்த—அதாவது 94.17 சதவீதம் உள்ள சாண்டலாயில் எனப்படும் சந்தன எண்ணெய் இங்கே கிடைக்கிறது என்பது உண்மையா? இந்த ஆலையைப் பொறுத்தவரையில், கால தாமதமாக திறந்ததன் காரணமாக சுமார் 22 லட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டது என்று சொல்லப்படுவது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, மிக உயர்ந்த சந்தன எண்ணெய் சத்து கொண்ட எண்ணெய் இங்கே தயாரிக்கப்படுகிறது என்பது முழுக்க முழுக்க உண்மை. ஆனால் தாமதமாகத் திறந்ததால் நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது சரியான தகவலாக எனக்குத் தெரியவில்லை. காரணம், முதல் முறையாக இப்படி ஒரு தொழிலில் தமிழக அரசு இறங்கியிருக்கிறது. இதற்காக நான் ஒரு நீண்ட பதிலைச் சொல்லியாக வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே, அதாவது முதலாண்டிலேயே, இப்படிப்பட்ட தொழிற்சாலையைத் தொடங்குவேன் என்று அறிவித்தார்கள். ஆனால் அன்றைக்கிருந்த ஜனதா அரசு இதைச் சிறு தொழிலாக அறிவித்துவிட்டது. அதற்குப் பிறகு இதற்கு அனுமதி வழங்குவதில், சங்கடம் ஏற்பட்டது. ஆகவே இதைச் சிறு தொழிலாக மாற்ற முயற்சிகளை மேற்கொண்டோம். அப்படி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, சிறு தொழில் என்று ஆரம்பித்தால், கட்டிடத்திற்கு எவ்வளவு தொகை, இயந்திரத்திற்கு எவ்வளவு தொகை, என்று பல்வேறு பிரிவுகளை ஏற்படுத்த வேண்டிய

நிலை வந்தது. எனவே அதை வனத்துறையே தொடங்குவது அல்லது அந்தத் தொழிற்சாலையை வனத் துறையே கட்டுவது என்பதைவிட அதில் அனுபவம் வாய்ந்த டான்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டு, அவர்களிடம் ஒப்படைத்து அவர்கள் அதைக் கட்டி முடித்து, வெள்ளோட்டம் விடுகிற வரை, அவர்கள் பொறுப்பிலேயே விடப்பட்டது. அவ்வாறு அவர்கள் கட்டி முடித்து இப்போது வனத் துறையிடம் தந்திருக்கிறார்கள். இதை வியாபார ரீதியில் நடத்த வேண்டியிருப்பதால், இதை வனத் துறைக் கழகத்திடம் ஒப்படைத்து, இந்தத் தொழிற்சாலை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே தொடக்கத்திலிருந்தே எப்படியாவது தமிழகத்தில் முதன் முறையாக சந்தன எண்ணெய் தொழிற்சாலையைத் தொடங்குவோம் என்கிற முயற்சியில் தாமதப்பட்டிருக்கிறதே தவிர வேறு தாமதம் இல்லை. அதனால் நட்டம் இருப்பதாக என்னிடம் தகவல் ஏதுமில்லை.

திருவக்கரையில் உள்ள சிவத்தலம்.

213. வினா.—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தென் ஆற்காடு மாவட்ட திருவக்கரையிலுள்ள சிவத்தலம், பராமரிப்பு இன்றி உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், இதனை புனரமைக்கும் கருத்தேதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) மற்றும் (இ) ரூபாய் 50,000 மதிப்பீட்டில் திருப்பணி துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. அ. ப. சிவராமன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம் திருவக்கரையிலுள்ள அருள்மிகு சந்திர மௌளீஸ்வரர் திருக்கோயிலும் மற்றும் அங்கே உள்ள காளி கோயிலும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையும் சிறப்பும் வாய்ந்த திருக்கோயில்கள். அதற்கான இராஜ கோபுரத் திருப்பணி தற்போது நடைபெற்று வருகிறது. அத்துடன் மிகவும் சிறப்பு வாய்ந்த, கலைச் சிற்பங்களைக் கொண்ட தேர்வடிவில் அமைந்துள்ள மண்டபங்களிலும் புல்பூண்டுகள் முளைத்து, அதன் காரணமாக அவை பாழ்பட்டிருப்பதை அரசு அறியுமா? எனவே அவற்றின் பராமரிப்பையும் அரசு மேற்கொள்ளுமா ?